**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி**
**OS.No.70/2017 . நாள்.24.03.2025**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. நசீம் பேகம் அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | ேஹமநாதன் | **வயது** | 40 |
| **த/பெ. க/பெ.** | அர்சுனன் | **மதம்** | |
| **முகவரி** | திருவயலூர் | **தொழில்** | மளிகை கடை |

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் திரும்ப அழைக்கப்பட்டு 5-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

1. நானும், 1-ம் வாதியும் 1,2 பிரதிவாதிகளோடு சேர்ந்து வசித்து வருகிறோம் என்று சொன்னால் தற்போது ஒரு வருடமாக சேர்ந்து வசித்து வருகிறோம். 1-ம் பிரதிவாதி எனது அப்பா, 2-ம் பிரதிவாதி எனது அம்மா என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் கிருஷ்ணகிரி கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தில் கடன் வாங்கியுள்ளதாக இந்த வழக்கில் அவர்களை தரப்பினராக சேர்த்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். 18.10.1997 ஆம் ஆண்டு 2-ம் பிரதிவாதியான எனது தயார் மேற்படி கூட்டுறவு சங்கத்தில் ரூ.2,00,000/- கடன் கேட்டு அது அனுமதிகப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த காலகட்டத்தில் வாதிகளாகிய நாங்கள் மைனர்களாக இருந்தோம் என்றால் சரிதான்.

2. அந்த கடனுக்காக 1,2 பிரதிவாதிகள் 05.11.1997 ஆம் தேதியில் இந்த வழக்கு சொத்தை உட்படுத்தி போச்சம்பள்ளி சார்பதிவக அலுவலகத்தில் அடமான கடன் பெற்றுள்ளார்கள் என்று சொன்னால் எனக்கு தெரியாது. கூடுதல் பதிலுரை தாக்கல் செய்த பிறகு அதில் கூறப்பட்டுள்ள விவரங்களை நான் தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். 02.01.1998 ஆம் தேதி 2-ம் பிரதிவாதி கடன் ரூ.80,000/- 5-ம் பிரதிவாதியிடம் பெற்றுள்ளார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. 04.03.1998 ஆம் தேதி 2-ம் பிரதிவாதி கடன் ரூ.1,20,000/- 5-ம் பிரதிவாதியிடம் பெற்றுள்ளார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. அந்த கடனுக்கான மாதந்திர

தவணதொகை ரூ.3078/– நிர்ணயிக்கப்பட்டு அந்த தவணை தொகையை 11.01.1999 வரை மட்டும் செலுத்தியுள்ளார் என்று சொன்னால் எனக்கு தெரியாது.

3. அதற்க்கு பின்னிட்டு 5–ம் பிரதிவாதி தமிழ்நாடு கூட்டுறவு சங்கம் சட்டத்தின் படி சட்டபூர்வமான அறிவிப்பு கொடுத்து அதன் படியும் தொகை செலுத்தப்படவில்லை என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அதற்க்கு பின்னிட்டு கூட்டுறவு சங்க சட்டப்படி வழக்கு தொடர்ந்து 28.02.2000 தேதியில் ARC.No.2272/99 படி ரூ.2,53,944/– கொடுக்க வேண்டும் என தீர்ப்பாணை 27.03.2000 தேதியில் பிறப்பிக்கப்பட்டது என்று சொன்னால் எனக்கு தெரியாது. 1–ம் பிரதிவாதி 5–ம் பிரதிவாதிக்கு எதிராக மேற்படி தீர்ப்பாணையின் பேரில் மேல் முறையீடு செய்து அந்த மேல் முறையீடும் தள்ளுப்படி ஆகிவிட்டது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி தீர்ப்பாணையின் அடிப்படையில் கூட்டுறவு சங்கம் வழக்கு சொத்தை ஏலம் விட நடவடிக்கை எடுத்தது என்று சொன்னால் எனக்கு தெரியாது.

4. அந்த சொத்தை யாரும் ஏலம் எடுக்க முன்வராத காரணத்தால் கூட்டுறவு சங்க சட்டப்படி 5–ம் பிரதிவாதியே அந்த சொத்தை சுவாதீனம் அடைந்தார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. அதன்படிஆவண எண்.615/2004 தேதி 28.05.2004 படி வழக்கு சொத்தின் உரிமை மற்றும் சுவாதீனத்தை எடுத்துக்கொண்டார்கள் என்று சொன்னால் எனக்கு தெரியாது. இந்த வழக்கிற்க்கு முன்னால் அசல் வழக்கு எண்.114/1997 பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்து எங்களுக்குள் சமாதனம் ஏற்ப்பட்டதாக வழக்கை வாபஸ் பெற்றோம் என்று சொன்னால் சரியல்ல. அதற்க்கு பின்னிட்டு கிருஷ்ணகிரி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.63/2000 தாக்கல் செய்து அந்த வழக்கில் இந்த பிரதிவாதி 8–ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. இதே சொத்தை ரூ.15,00,000/– மதிப்பு காட்டி 2000 வருடத்தில் வழக்கு தாக்கல் செய்தோம் என்று சொன்னால் அவ்வாறு தாக்கல் செய்யவில்லை.

5. வழக்கை சொத்து மதிப்பு ரூ.10,00,000/–க்கு மேல் இருப்பதால் வழக்கானது மாவட்ட முதன்மை நீதிமன்றத்திற்க்கு மாற்றம் செய்யப்பட்டு அசல் வழக்கு எண்.12/2004 என கோப்புக்கு எடுக்கப்பட்டது என்று சொன்னால் எனக்கு தெரியாது. அந்த வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்று சொன்னால் அதுவும் தெரியாது. மேற்படி

வழக்குகளை மறைத்து இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.43/2010 தாக்கல் செய்தோம் என்றுசொன்னால் எனது அண்ணன் எனது பெயரை போட்டு தாக்கல் செய்திருக்கலாம். அந்த வழக்கில் சொத்து மதிப்பை ரூ.93,300/- என்று குறைத்து காட்டி தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் எனக்கு தெரியாது.

6. அசல் வழக்கு எண்.43/2010 ல் இந்த பிரதிவாதி தரப்பினர் கிடையாது என்று சொன்னால் எனக்கு தெரியாது. 3 முதல் 6 பிரதிவாதிகளை ஏமாற்றும் நோக்கோடு வழக்கை தாக்கல் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. அந்த வழக்கில் எனது பெற்றோர்கள் ஒரு தலைபட்சமாக்கப்பட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. அசல் வழக்கு எண்.43/2010 வழக்கை மாற்ற கேட்டு  மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் Trop.No.08/2018 தாக்ல் செய்து மேற்படி மனுவானது 25.06.2010 ஆம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண்.43/2010 1,2 பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் எனக்கு தெரியாது.

7. அசல் வழக்கு எண்.43/2010-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை இந்த பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் எனக்கு அந்த கேள்வி புரியவில்லை. இந்த வழக்கு சொத்தை பொருத்து 5-ம் பிரதிவாதி 1999 ஆம் வருடம் தீர்ப்பாணையின் அடிப்படையில் உரிமை மற்றும் சுவாதீனம் பெற்றுள்ளதால் அசல் வழக்கு எண்.43/2010 வழக்கின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை இந்த பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல.தாவவில் சொல்லியுள்ள வடமலம்பட்டி கிராம சர்வே எண்.159/ஏ/2பி1 சொத்தானது 5-ம் பிரதிவாதிக்கு மட்டுமே உரிமையானது என்று சொன்னால் சரியல்ல. எனவே தாவாவில் கோரியுள்ள

பரிகாரங்கள் எதுவும் அடைய நான் தகுதி அற்றவன் என்று சொன்னால் சரியல்ல. 5–ம் பிரதிவாதிக்கு எதிரான இந்த தாவாவானது செலவு தொகையோடு தள்ளுப்படி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

SHANMUGANATHAN
Distirct Munsif cum
Judicial Magaistrate
Digitally signed by
SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.